# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண். 58/2022**

**பெயர்:பாலு** **நாள்: 13.10.2025**

வா.சா.1 – 1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 - பாலு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி : 01:05

நான் உரிய காலத்தில் கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்ற முன் வராததால் கிரய ஒப்பந்த முன்தொகை கோர இயலாது என்றால், சட்டப்படி எனக்கு உரிமை உள்ளது. இந்த வழக்கு கால வரையறை சட்டப்படி பாதிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள கீறல் என்ற இடத்தில் யாருடைய ரேகை என்று எழுதவில்லை என்றால், 1-ம் பிரதிவாதியின் ரேகைதான் அது ஆனால் பெயர் எழுதவில்லை. என்னிடம் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கீறல் எழுதப்பட்டுள்ளது என்றால், அவர்கள் ஆவணத்தை Xerox எடுத்து காண்பிக்கிறார்கள் ஆனால் அசல் ஆவணத்தில் கீறல் மோகன் என்று உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் மோகன் மற்றும் பாலு ஆகிய இருவரும் தரப்பினர்கள் என்றால், சரிதான். மேற்கூறிய 2 ஆவணத்திலும் கீறலுக்கு கீழ் உள்ள கையெழுத்து யார் உடையது என்றால், மோகனுடைய மகள் பிரியாவின் கையெழுத்து ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் மற்றும் 2-ம் பக்கத்தில் உள்ள ரேகை 3-ம் பக்கத்தில் உள்ள ரேகையை விட சிறிதாக உள்ளது என்றால், சாட்சிகளின் முன்னிலையில் தான் ரேகை வைத்துள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் மற்றும் 2-ம் பக்கத்தில் உள்ள மோகனின் மகள் கையெழுத்தும் 3-ம் பக்கத்தில் உள்ள கையெழுத்தும் வேறுவேறாக உள்ளது என்றால், சாட்சிகளின்

முன்னிலையில்தான் மோகனின் மகள் கையெழுத்து செய்தார். பி.வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து விவரம் வெவ்வேறாக உள்ளது என்றால், வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து விவரம்தான் சரியானது. பி.வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் வேறுவேறு நபர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால், அசல் ஆவணமான வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ள சாட்சிகள் தான் உண்மையான நபர்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1-ம் தாள் மற்றும் 2-ம் தாள் வேறுவேறு நிறங்களில் உள்ளது என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. சொத்து விவரத்தை மாற்றுவதற்காக வேண்டி சொத்து விவரம் கூடிய 3-ம் பக்கத்தை நீக்கிவிட்டு வேறு ஒரு பக்கத்தை இணைத்துள்ளார்கள் என்றால், 1-ம் பிரதிவாதிதான் அந்த ஆவணத்தை தயாரித்தார், அதில் நான் கையெழுத்து மட்டும் செய்தேன். வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யததால் வா.சா.ஆ.1 ஆவணத்தை வழக்கிற்காக தயார் செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல, 1-ம் பிரதிவாதிதான் தயார் செய்தார் நான் தயார் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்ட மோகனின் மகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. நான் முதலாம் பிரதிவாதியிடம் ஒப்பந்தம் ஏற்படுத்திய சொத்துக்களும் 2-ம் பிரதிவாதி வாங்கிய சொத்துக்களும் வெவ்வேறானவை என்றால், சரியல்ல இரண்டும் ஒரே சொத்துக்கள்தான். 2-ம் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கு அவர் சுமார் 15 லட்சம் ரூபாய் முதலீடு செய்து மேம்படுத்தி உள்ளார் என்றும் அதனை அபகரிப்பதற்காக நானும் 1-ம் பிரதிவாதியும் சேர்ந்து வஞ்சக்கூட்டணி ஏற்படுத்திக் கொண்டு 2-ம் பிரதிவாதியை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல 1-ம் பிரதிவாதி கிரயம் ஏற்படுத்திக் கொடுக்காமல் ஏமாற்றியதால் கொடுத்த முன்தொகையை திரும்ப கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2-ம் பிரதிவாதியின் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த வழக்கை கால தாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், பலமுறை சாட்சிகளை வைத்து கொடுத்த பணத்தை திருப்பி கேட்டேன் ஆனால் அவர் பணத்தை திருப்பி கொடுக்க கால தாமதம் ஏற்படுத்தியதால்தான் நான் இந்த வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்ய வேண்டியிருந்தது.

2-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 01:30

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.10.13 17:02:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.